## இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியம் - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை

செயற்பாட்டு நிலையில் காணப்படாத இந்த நிதியம் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கலைப்பதற்காக தொடர்ந்து இயங்க முடியாததன் அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இறப்பர் மீள் நடுகை நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 63,438,233 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இனங்காணப்படாதிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத இச்சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 904,699 தொகை பெறுமானத்தேய்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) குளிரூட்டி இயந்திரம் மற்றும் அலுவலக தளபாட உபகரணங்களான ரூபா 7,609,866 தொகை ஒரே கணக்கில் பதியப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 63,438,233 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை, நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரித்துறுதி |
| (ஆ) | முற்பணங்கள் | 15,220,514 | விபரமான பட்டோலை, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் | 9,617,628 | விபரமான பட்டோலை, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (ஈ) | பெறவேண்டிய மீதி | 96,544,110 | தொடக்க ஆவணங்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | செலுத்த வேண்டிய மீதி | 18,871,810 | விபரமான பட்டோலை, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 96,544,110 தொகையான 13 மீதிகள் 08 ஆண்டுகளாக இனங்காணப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 18,871,810 பெறுமதியான 14 பொறுப்பு விடயங்கள் 07 ஆண்டு காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இப்பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 383,580 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 392,390 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 8,810 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. நிதியத்தின் மொத்த வருமானம், முதலீட்டு வட்டி வருமானத்தினை மாத்திரம் உள்ளடக்கியிருந்ததுடன் அது ரூபா 561,119 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 நிதியம் நிலைத்திருத்தல்

செயற்படுகின்ற நிலையில் இல்லாத இந்த நிதியத்தினைக் கலைக்கும் வகையில் உரிய அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 யூன் 28 ஆந் திகதி வரையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் கீழ் வருடாந்தம் செலவு செய்தல் இடம்பெறவில்லை என்பதனால் மீளாய்வாண்டு தொடர்பாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) முற்பணங்களைத் தீர்த்துவைத்தல்

(இ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) நிலையான சொத்துக்கள்